குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.100/ 2024

அ.சா.1

2026–ம் ஆண்டு மே 26–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஞானசேகரன் | தொழில் | |
| தந்தை பெயர் | ஜெயபால் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.43 மணி,

Accused A1)Sanjay, A2)Arunkumar are present. A3)Mathiyalagan absent. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் எம்.ஓலைப்பட்டியில் குடியிருந்து தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் 3 ஆம் எதிரியை தெரியும். கடந்த 27.08.2023 ஆம் தேதி மாலை 05.45 மணியளவில் நானும், எனது மனைவி கீதா என்பவரும் ஓமலூர் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றோம். தொளசம்பட்டி அரசு மருத்துவமனை அருகே சென்றபோது, எதிரி சஞ்சய் அவரது நண்பர்கள் அருண்குமார் மற்றும் மதியழகன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு எதிர் திசையில் வந்தார்கள்.

2. எங்களை பார்த்தவுடன் அவர்கள் U turn போட்டு எங்களுக்கு பின்னால் துரத்திக் கொண்டு வந்தார்கள். 5 ஆவது மைல் செல்லும் வழியில் உள்ள எரி அருகே எங்கள் பின்னால் துரத்திக்கொண்டு வந்தவர்களை நான் எதற்காக துரத்திக் கொண்டு வருகிறீர்கள் என்று கேட்டேன். அவர்கள் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி வந்து சஞ்சய் என்னை பார்த்து தேவிடியா பையா அப்படித்தான்டா வருவேன் என்று திட்டினார். இதனால் நானும், எனது மனைவியும் பயந்துகொண்டு திரும்ப வீட்டிற்கு வந்துவிட்டோம்.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.05.26 17:46:18 +0530

3. நான் எனது தம்பி நந்திவர்மன் மற்றும் எனது அக்கா தேன்மொழி ஆகியோரிடம் நடந்த சம்பவத்தை சொன்னேன். நாங்கள் திரும்பி வருவதற்குள்ளாக சஞ்சயும், அவரது நண்பர்களும் அவர்களது வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். நானும், எனது தம்பி நந்திவர்மனும், அக்கா தேன்மொழி ஆகியோர் மாலை 06.30 மணியளவில் என் வீட்டருகே உள்ள சடையன் வீட்டிற்கு அருகே நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது சஞ்சய் குடிபோதையில் அங்கு வந்து எங்களை பார்த்து கல்லை எடுத்து அடித்தார். கல் எனது இடது காலில் விழுந்து காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த கட்டையை எடுத்து வந்து என் இடது நெஞ்சில் அடித்தார்.

4. அதை பார்த்த எனது அக்கா தேன்மொழியும், எனது தம்பி நந்திவர்மன், எனது மனைவி கீதா ஆகியோர் ஓடி வந்து என்னை கூட்டிச் செல்ல வந்தார்கள். எனது தம்பி என்னை பிடித்து இழுத்து வந்தபோது, எதிரி சஞ்சய் கையால் என் தம்பி நந்திவர்மனின் முதுகில் அடித்துவிட்டார். என் மனைவி கீதாவின் முடியை எதிரி சஞ்சய் பிடித்து இழுத்து, அவர் அணிந்திருந்த சுடிதாரை இழுத்து கிழித்துவிட்டார். அதன்பின்பு எங்களை பார்த்து இப்போது நீங்கள் தப்பித்து விட்டீர்கள். உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார்.

5. அதன்பின்பு எனக்கு கால்வீக்கமாகவும் மார்பில் வலியும் இருந்ததால் நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். அப்போது போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. (அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.54 மணி.**

SADHAMHUSAINS

Digitally signed by SADHAMHUSAINS
Date: 2026.05.26 17:46:22 +0530